www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Dr. A. Vennila, Principal, Mydeen Matric. Hr. Sec. School
Melacavery, Kumbakonam - Thanjavur District
(03.12.24)

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## தமிழ்

வகுப்பு - 9 மதிப்பெண் - 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10x1=10

1. பொதுவர்கள் பொலிவுறப் போர் அடித்திடும் நிலப்பகுதி -------
அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

| அ) | ஆ) | இ) | ஈ) |
|---|---|---|---|
| கலைக்கூடம் | கடி | வினவினான் | இன் |
| திரையரங்கம் | உறு | செப்பினான் | கூட |
| ஆடுகளம் | கூர் | உரைத்தான் | சிறு |
| அருங்காட்சியகம் | கழி | பகன்றான் | அம்பு |

3. ஐந்து சால்புகளில் இரண்டு
அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

4. குற்றியலுகரம் ------- வகைப்படும்.
அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு

5. பல்லவர்காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ------.
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திருவனந்தபுரம் ஈ) தாடிக்கொம்பு

6. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறை பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

7. சாரதா சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு ------.
அ) 1919 ஆ) 1929 இ) 1939 ஈ) 1949

8. புறநானூறு என்பது ________ புணர்ச்சி.
அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) இயல்பு

9. குடும்ப விளக்கு _______ இலக்கியம்.
அ) காப்பிய ஆ) சங்க இ) அற ஈ) தற்கால

10. "செப்புத் திருமேனிகளின் பொற்காலம்" என்று அழைக்கப்படும் காலம் ------- -
அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6
(வினா எண் -14 கட்டாயமாக விடையளிக்கவும்)

11. நடுகல் என்றால் என்ன?
12. "மூவாது மூத்தவர் நூல் வல்லார்" உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.
13. நீங்கள் விரும்பி படித்த நூல்கள் யாவை?
14. 'தூண்' முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.** 3 x 2 = 6

15. மரபு பிழை நீக்கி எழுதுக.

அ) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள். ஆ) கொடியில் உள்ள மலரை எடுத்து வா.

16. இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக் குறிப்பு தருக.

17. கலைச்சொல் தருக.

அ) Sentence ஆ) Melody

18. பிழை நீக்கி எழுதுக.

அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம். ஆ) குழலியும் பாடத் தெரியும்.

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** 2 x 3 = 6

**(வினா எண் -21, கட்டாயமாக விடையளிக்கவும்)**

19. சங்க காலப் பெண்பாற்புலவர் பெயர்களைக் குறிப்பிடுக.

20. இராவண காவியத்தில் இடம்பெற்றுள்ள இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

21. 'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை எழுதுக.

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** 2 x 3 = 6

22. இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

அ) அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

ஆ) பழனி மலை ; பெரியது இமயமலை மிகவும் பெரியது.

இ) கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

23. கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

24. மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

அ) உடும்புப்பிடி ஆ) மேளதாளத்துடன் இ) ஆகாயத்தாமரை

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 2 x 4 = 8

25. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்- தமிழ்- ஆங்கிலம், என்னும் கையடக்க அகராதி பத்து படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**26. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**VII. கட்டுரை வடிவில் விடை தருக** 1 x 8 = 8

27. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்தியினை விவரிக்க. (அல்லது)

28. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com